**தலைப்பு 241 – பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2 நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வருமானக் குறியீடு 20.02.03 இலாப வருமானம்** | | |
| (i) 2019 ஆண்டிற்காக ரூபா 63,900 மில்லியனிற்காக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்ளவாறான வருமானம் ரூபா 22,833 மில்லியன் தொகை மாத்திரம் ஆகும். அது மதிப்பீட்டு வருமானத்தில் 36 சதவீதம் ஆகும். | மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | இலாப வருமான மதிப்பீடு ரூபா 41,066 மில்லியன் தொகை என திருத்தப்பட்டு அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அப்போது காணப்பட்ட அரசியல் நிலைமை காரணமாக மற்றும் அவ்வாண்டில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அத்திருத்திய மதிப்பீட்டிற்காக பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற முடியாமல் போனது. |

| | | |
|---|---|---|
| (ii) 08 நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட இலாப வருமானத்துக்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் குறைவடைதல் 50 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | -மேற்படி- | <u>தேசிய சேமிப்பு வங்கி / மக்கள் வங்கி</u><br>இலங்கை மத்திய வங்கியால் தீர்மானிக்கப்பட்டிருந்த BASEL III குறைந்தபட்ச மூலதன தேவையினை பேணிச் செல்வது தொடர்பாக முக்கியத்துவம் வழங்கி செயற்படுதல் அத்தியவசியமாக இருந்தமையால் அந்த நிறுவனங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. அதேபோல் ஏனைய நிறுவனங்களில் காணப்பட்ட திரவத் தன்மை சிக்கல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கங்களின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிக்க முடியாமல் போனது. |
| (iii) 02 நிறுவனங்களின் மதிப்பீட்டு இலாப வருமானம் முறையே ரூபா 100 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,700 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், உள்ளவாறான வருமானம் முறையே ரூபா 250 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2,300 மில்லியன் தொகை ஆக இருந்த காரணத்தினால் மதிப்பீட்டு இலாப வருமானத்திற்கு ஒப்பாக உள்ளவாறான வருமான அதிகரிப்பு முறையே 150 சதவீதம் முதல் 35 சதவீதம் ஆகக் காணப்பட்டது. | -மேற்படி- | நிழவும் செயற்பாட்டு மற்றும் நிதி செயலாற்றல் நிலைமையின் கீழ் மதிப்பீட்டு வருமானத்தை விட கூடிய வருமானம் ஒன்றை சேகரிப்பதற்கு இயலுமை ஒன்று காணப்பட்டது. |
| (iv) இலங்கை வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம், அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், தேசிய தொழில் முகாமைத்துவ நிறுவனம் (National Institute of Business Management), மற்றும் முகாமைத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவனம் என்பவற்றிற்காக முறையே ரூபா 10,000 மில்லியன், ரூபா 50 மில்லியன், ரூபா 75 மில்லியன், ரூபா 190 | பகிரங்க தொழில் முயற்சிகளில் இருந்து அரசாங்கத்திற்கு பொருளாதார நலன்கள் கிடைக்கக் கூடிய விதமாக செயற்படுவதற்கு திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | மூலதன கணியச் சிக்கல் காரணமாக மற்றும் திரவத் தன்மை சிக்கல்கள் காரணமாக அந்த நிறுவனங்களில் இருந்து வருமானம் ஏதும் சேகரித்துக் கொள்வதற்கு முடியாமல் போனது. |

| | | |
|---|---|---|
| மில்லியன், ரூபா 12 மில்லியன் மற்றும் ரூபா 15 மில்லியன் தொகைகள் மதிப்பீடு செய்யப்பட்டி ருந்ததுடன், ஆண்டின் போது அவற்றில் வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை. | | |
| (v) இலங்கை தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் இலாப வருமானத்திற்கு எதுவித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. | நட்டமடையும் நிறுவனங்களின் செயற்திறமையை அதிகரிப்பதற்காக நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகள் சமர்ப்பித்தல் பொறுத்தமானது. | தொடர்ச்சியாக நட்டமடையும் நிறுவனங்களில் இருந்து வருமானம் ஒன்றினை எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. |

(ஆ) வருமானக் குறியீடு 20.02.04 – பங்கிலாப வருமானம்
--------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) 09 நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பீட்டு பங்கிலாப வருமானத்திற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் மிகைத்திருந்ததுடன், அது நூற்றுவீதம் 31 சதவீதம் முதல் 180 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாக தயாரிக்கப்பட்ட வேண்டும். | நிலவுகின்ற செயற்பாட்டு மற்றும் நிதி செயலாற்றல் நிலைமையின் கீழ் மதிப்பீட்டு வருமானத்தை விட கூடிய வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ii) 02 நிறுவனங்கள் தொடர்பாக பங்கிலாப வருமானம் மதிப்பிடப்பட்டிருக்காத போதிலும் அந்த இரண்டு நிறுவனங்களில் இருந்து ரூபா 14 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. | மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் கால ரீதியாக பெற்றுக்கொள்ள வேண்டும். | பங்கிலாப வருமான மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் உரிய தகவல்கள் கிடைக்காமையால் மதிப்பீடுகளில் உட்படுத்தப்பட்டிருக்காவிடினும் குறிப்பிட்ட கம்பனிகளில் இருந்து பங்கிலாப வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (iii) 02 நிறுவனங்கள் தொடர்பான பங்கிலாப வருமானம் ரூபா 2,508 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், உள்ளவாறான வருமானம் ரூபா 1,725 மில்லியன் தொகையாக இருந்தமையால் மதிப்பீட்டு வருமானமத்தை விட உள்ளவாறான வருமானத்தில் குறைவடைதல் 31 சதவீதமாக காணப்பட்டது. | திரவத்தன்மை சிக்கல்களில் இருந்து தவிர்ப்பதற்கு திட்டமுறைகளை பரிந்துரைக்க வேண்டும். | இந்த நிறுவனங்களில் காணப்பட்ட திரவத் தன்மைச் சிக்கல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கத்தின் காரணமாக எதிர்பார்த்த வருமானத்தை சேகரிக்க முடியாமல் போனது. |
| (iv) 05 நிறுவனங்கள் கடந்த பல வருடங்களில் பங்கிலாப வருமானத்திற்கு பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) 2019 ஆண்டிற்காக லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி, பரந்தன் கெமிகல், சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி, இலங்கை சீனி கம்பனி, இலங்கை திரீபோஷா கம்பனி என்பவற்றிற்காக முறையே ரூபா 3 மில்லியன் தொகை, ரூபா 15 மில்லியன் தொகை, ரூபா 25 மில்லியன் தொகை, ரூபா 50 மில்லியன் தொகை, ரூபா 75 மில்லியன் தொகை என பங்கிலாப வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது வருமானத்திற்காக பங்களிப்பு ஏதும் வழங்கியிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் லங்கா புத்திர கம்பனி 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது பங்கிலாப வருமானத்திற்கு ரூபா 118 மில்லியனை விட கூடிய பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2019 ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டின் படி இலக்கம் 20.02.05.00 மற்றும் 20.03.02.20 ஆகிய வரியல்லாத வருமானத் தலைப்புக்களின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் பகிரங்க தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என காட்டப்பட்டிருந்த போதிலும், அத் தலைப்புகளுக்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகள் தயாரிக்க முடியாவிடின் அத் தலைப்புக்களை மதிப்பீட்டிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க முடியும். | பதிலளிக்கப்படவில்லை. |

**2.2 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 02 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஆரம்ப செலவு மதிப்பீடு மற்றும் திருத்திய செலவு மதிப்பீடு இடையே வித்தியாசம் முறையே 65 சதவீதம் முதல் 82 சதவீதம் வரை காணப்பட்டது. | மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாக தயாரிக்க வேண்டும். | எதிர்பார்க்காத விதமாக கடமை பிரயாணங்கள் அதிகரித்தல் காகிதாகிகளின் விலை அதிகரித்தல் மற்றும் கேள்விகள் அதிகரித்திருந்தமையால் அந்த செலவுத் தலைப்புக்காக மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலவு விடய இலக்கம் 1409 ற்காக ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் ரூபா 2 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 03 குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நி.பி.66 மாற்றங்களின் மூலம் ரூபா 1,582 மில்லியன் ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. அவை ஆரம்ப செலவு மதிப்பீட்டின் சதவீதப்படி 79100 சதவீத அளவான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | -மேற்படி- | 1409 ஏனைய செலவுகள் - தேசிய சேமிப்பு வங்கியின் செயற்படாத கணக்குகளுக்காக கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 1,582 மில்லியன் மேலதிக ஏற்பாடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதற்காக கொடுப்பனவிற்கு கட்டுநிதி கிடைக்காமையால் அந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |
| (இ) | மீளாய்வாண்டின் போது 02 மூலதனச் செலவு விடயங்கள் தொடர்பாக ஆரம்ப செலவு மதிப்பீட்டுக்கு ஒப்பாக திருத்திய செலவு மதிப்பீட்டின் வித்தியாசம் 695 சதவீதம் மற்றும் 1,249 சதவீதம் ஆகும். | -மேற்படி- | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் விலை அதிகரித்தல் மற்றும் புதிய உத்தியோகத்தர் வந்தமையால் கேள்விகள் அதிகரித்தல் அந்த செலவுத் தலைப்புக்காக மேற்படி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதேபோல், 2019 பாதீட்டு பிரேரணை ஒன்றின் மூலம் புதிய உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டின் போது ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டது. ஆரம்ப மதிப்பீடு உட்படுத்தப்படாத இந்த ஏற்பாடுகள் பாதீட்டு பிரேரணை ஒன்றின் மூலம் உட்படுத்துவதற்கு காரணமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது செலவு விடய இலக்கம் 1502 (ஓய்வூதிய நலன்கள்) ஆக ஆரம்ப மதிப்பீட்டின் மூலம ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாததுடன், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 76 மில்லியன் ஏற்பாடுகளில் 17 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த செலவு விடயம் புதிதாக ஏற்படுத்துவதற்காக நி.பி. 68 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை. | -மேற்படி- | ஆரம்ப மதிப்பீடுகளில் உட்படுத்தப்படாத இந்த ஏற்பாடுகள் பூகொட டெக்ஸ்டையில் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக வருட மத்தியில் ஒதுக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 04 மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக மொத்த தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 57 மில்லியனாக காணப்பட்டதுடன், சேமிப்புக்கள் ரூபா 53 மில்லியனாக இருந்தது. அதன்படி சேமிப்புக்களின் நூற்றுவீதம் 56 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | -மேற்படி- | திணைக்களத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக பணம் ஒதுக்கப்பட்ட போதிலும் அவ்வருடத்தில் வேலை ஆரம்பிக்கப்படாமை, பெறுகை அலுவல்கள் பூரத்தி செய்யப்படாமை, கேள்வி காணப்படாமை, எதிர்பார்த்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாமை ஆகிய காரணங்களினால் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| | (i) அத்தியாயம் XII பிரிவு 14.1.3 | 2011 – 2013 வரை 02 வருட காலம் சம்பளம் இன்றிய வெளிநாட்டு விடுமுறை பெற்று பட்டப் பின்படிப்பு பட்டமொன்று பெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் 06 வருடங்களுக்கு பின்னர் 03 வருடங்களுக்காக சம்பளம் இன்றிய கல்வி விடுமுறை பெற்று கலாநிதிப் பட்டமொன்றிற்காக வெளிநாடு சென்றிருந்த போதிலும் தாபனக் கோவையின் பிரகாரம் அதற்கான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | தாபனக் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். | அந்த உத்தியோகத்தர் கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் 10 வருட கட்டாய சேவைக் காலம் தொடர்பாக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | -மேற்படி- | உத்தியோகத்தர் ஒருவர் 2019 ஜனவரி 01 திகதி முதல் 2021 பெப்ரவரி 14 திகதி வரை பட்டப் பின் படிப்பு பாடநெறி ஒன்று கற்பதற்காக சம்பளம் இன்றிய கல்வி விடுமுறை விண்ணப்பிக்கப்பட்டு கல்வி விடயங்களுக்காக வெளிநாடு சென்றிருந்ததுடன், 2019 திசெம்பர் மாதம் வரை அதற்காக தாபனக் கோவையின் பிரகாரம் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | -மேற்படி- | இணங்குகின்றேன். நிதி அமைச்சு 2020.09.08 திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட அமைச்சிற்கு விடுமுறையை அங்கீகரிப்பதற்காக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| | (ii) அத்தியாயம் XV பிரிவு 4 | 2018 ஜூன் 25 திகதி முதல் 2018 ஆகஸ்ட் 20 திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற மனிதவள திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான 56 நாட்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக பங்குபற்று வதற்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் இன்றிய விடுமுறை வழங்கப்பட்டிருந்ததுடன், தாபனக் கோவையின் பிரகாரம் அதற்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தினேன். குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் கட்டாயமாக குறைந்தபட்ச சேவைக் காலத்தை மிகைத்து கடமையாற்றியுள்ளனர் என கருணையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். |
| (ஆ) | 2017 ஜூன் 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரிவு 6 | அனைத்து அரச நிறுவனங்களினாலும் தமது நிறுவனத்தின் கீழுள்ள அனைத்து சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்கள் கொம்டோலர் ஜெனராலிற்கு 2017 நவம்பர் 30 திகதி அளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2010 திசெம்பர் 14 திகதிய பகிரங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 55 இன் 07 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் செயலாளர் கணக்காய்வாய்வுக் குழுவின் செயலாளராகவும் செயற்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சில நிறுவனங்களின் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபையின் செயலாளர் ஆக செயற்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதன்படி, குழுவின் செயலாளர் பதவி வகிப்பவர் பக்க சார்பின்றி / சுதந்திரமாக செயற்படுகின்றாரா என்பது கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது. | காணப்படும் சுற்றறிக்கைகளில் குறைபாடுகள் காணப்படின் அவற்றை இனங்கண்டு திருத்துவதற்கு மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பகிரங்க தொழில் முயற்சிகளில் நல்லாட்சியை வலுப்படுத்துவற்காக சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. கணக்காய்வுக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் சுதந்திரத் தன்மையை அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் பாதுகாப்பதற்காக இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அவை உரிய முறையில் செயற்படாவிடின் கணக்காய்வாளர்கள் (உள்ளக / வெளி) அறிக்கையிடல் வேண்டும். |

**2.4 முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து 05 வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 332,459 தொகை மற்றும் ரூபா 75,845 தொகை காணப்பட்டது. | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவீடு செய்வதற்காக அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோத்தருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக கோப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. அடுத்த உத்தியோகத்தருக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் கோரிக்கைப் பத்திரம் அனுப்பப்பட்ட போதிலும் குறிப்பிட்ட முகவரியை விட்டும் சென்றுள்ளார் என அறிவிக்கப்பட்டது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 03 அடிப்படை குறிக்கோள்களின் கீழ் ஆண்டு பூராகவும் செயற்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. இதன் மூலம் திணைக்களத்தின் அமைச்சரவை விஞ்ஞாபனங் களில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய செய்பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான தொழிற்பாடுகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்து செயற்பாடுகளும் அடங்கும் விதமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். 2020 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | (i) செயல் நடவடிக்கை திட்டத்தின் 1.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிருவாக கோவைகள் (Administrative Manual) ற்காக அங்கீகாரம் வழங்குதல். | திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை செயற்படுத்துதல் திணைக்களத்தின் பொறுப்பொன்றாகும். | இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளை வகைப்படுத்தல் (Categorization of SOEs) அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறை ஒன்று தயாரித்தல். | மீண்டும் வகைப்படுத்தல் மேற்கொள்தல் தொடர்பாக கவனம் செலுத்தல் பொறுத்தமானதாகும். | அவ்வாறான திட்டமொன்று இருந்த போதிலும், அவ்வாறான தேவையொன்று காணப்படாமையினால் முன்னர் காணப்பட்ட வகைப்படுத்தலே பயன்படுத்தப்பட்டது. |
| (iii) | கம்பனிச் சட்டம், நல்லாளுகை வழிகாட்டல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கருமங்கள் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல். | இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதன் மூலம் நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகள்/ பலவீனங்களை குறைக்கக் கூடியதாக இருக்கும். | 2020 ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 2019 ஆண்டின் முதலாவது காலண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த பங்கிலாப கொள்கைகள், மிகை ஊதிய கொள்கைகள், நல்லாளுகை வழிகாட்டல்கள், சுற்றறிக்கை மற்றும் நிருவாக நடவடிக்கை முறை தயாரிக்கும் வழிகாட்டல்கள் வெளியிடுதல் | வழிகாட்டல்களை வெளியிடுவதன் மூலம் நிறுவனங்களின் அலுவல்கள் முறைப்படுத்தப்படும். | இணங்குகின்றேன். |
| (v) | இரண்டாம் காலாண்டில பூர்த்தி செய்ய வேண்டியிருந்த வருமானக் கொள்கைகள் தயாரித்தல் | திட்டமிட்டுள்ளவாறு செயற்படுதல் திணைக்களத்தின் பொறுப்பொன்றாகும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | உடன்படிக்கைகள் மேற்கொண்டு நிறுவனங்களின் செயலாற்றலின் எதிர்பார்த்த மட்டம் மற்றும் நெருங்கியிருந்த செயலாற்றல் மற்றும் எதிர்பார்த்த மட்டத்தை விட உண்மையான செயலாற்றல் வித்தியாசப்படும் போது அதற்கு தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்களை குறிப்பிட்டு அமைச்சரவைக்கு ஆறு மாதங்களுக்கு (06) ஒருமுறை அறிவிக்கும் படி திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு திணைக்களத்தின் சேவைகள் மற்றும் காரியங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2019 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அரசிற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகளின் காணிகளை துணை குத்தகை வழங்கும் போது, முகாமைத்துவ உடன்படிக்கை மாற்றம் செய்யும் போது மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளும் போது தங்கப் பங்கு உரிமையாளர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொடுப்பதற்காக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் அடங்கிய வழிகாட்டல் ஒன்று தாயரித்தல் உட்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2019 ஆண்டின் போது அவ்விடயத்தை உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கு திணைக்களத்திற்கு இயலாதிருந்துள்ளது. | ஆண்டின் போது எதிர்பார்த்த இலக்கை நோக்கி நெருங்குவதற்காக செயற்படுதல் திணைக்களத்தின் பொறுப்பொன்றாகும். | இணங்குகின்றேன். குறிப்பிட்ட வழிகாட்டல் கோவை வரைபு 2019.12.02 திகதிய கடிதத்தின் மூலம் பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவிற்கு அனுப்பப்பட்டதுடன், இறுதியாக அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதென கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த 2018 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருந்தவாறு அரசிற்கு சொந்தமான வாணிப தொழில் முயற்சிகளின் செயலாற்றல்களுக்காக திணைக்களத்தின் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு பதிலாக ஏனைய நிறுவனங்கள் / அரசு எடுத்திருந்த நடவடிக்கை குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும், செயற்படுத்த வேண்டிய பரிந்துரைகள் நேரடியாக மற்றும் தெளிவாக காட்டப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களும், 2017 ஆண்டின் போது திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளை அவ்வாறாகவே, 2018 ஆண்டின் போதும் வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | பகிரங்க தொழில் முயற்சிகளின் செயலாற்றலுக்கான பரிந்துரைகள் செயற்படுத்தக் கூடிய, காலத்திற்கு ஒத்த, பொறுத்தமானவையாக இருக்க வேண்டும். | இவ் வருடத்திற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கும் போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அரசுக்கு சொந்தமான வாணிப தொழில் முயற்சிகளின் செயற்பாடுகள், நிதி மற்றும் சேவை அலுவல்களின் செயலாற்றல், மேம்படுத்தும் குறிக்கோளுடன் பகிரங்க தொழில் முயற்சித் திணைக்களத்தினால் 2019 செப்தம்பர் 26 திகதிய PED 01/2019 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் கீழ் கூட்டு ஆர்வ உடன்படிக்கை தொடர்பான சுற்றறிக்கை ஒன்று மற்றும் வழிகாட்டல் ஒன்று வெளியிடப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கைக்கு நேரொத்ததாக நடத்தல் மற்றும் குறிப்பிட்ட உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு தூண்டுதல் தொடர்பாக திணைக்களத்தினால் தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக்கு எவ்வளவு தூரம் கடைபிடிக்கப்பட்டுள்ளன என தொடர் நடவடிக்கை எடுத்தல் மூலம் விளங்கிக் கொள்ளல் பொருத்தமானதாகும். | இணங்குகின்றேன். புதிய அரசாங்கம் அதிகாரத்தை பெற்றதுடன் 2019 ஆண்டின் புதிய கூட்டு ஆர்வ உடன்படிக்கை மூலம் பகிரங்க தொழில் முயற்சிகளில் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் தொடர்பாக கடை பிடிக்க வேண்டிய செய்முறை மீது இறுதிக் கொள்கை ஒன்றுக்கு வந்திருக்காமையால் PED 01/2019 சுற்றறிக்கையின் படி பகிரங்க தொழில் முயற்சிகளுடன் கூட்டிணைந்த ஆர்வ உடன்படிக்கை அணுகுதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசிற்கு சொந்தமான இனங்காணப்பட்ட 280 பகிரங்க தொழில் முயற்சிகளின் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் பகிரங்க தொழில் முயற்சிகள் மூலம் குறிப்பிட்ட கால வரையறையுள் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முறையே தொழில் முயற்சிகள் 61, 74 மற்றும் 98 வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மேற்பார்வையின் கீழ் காணப்படும் நிறுவனங்களில் இருந்து சமர்ப்பிக்கப்படாது இருந்த அறிக்கைகள் நூற்றுவீதப்படி | பகிரங்க தொழில் முயற்சிகளின் வருடாந்த அறிக்கைகள் தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். பகிரங்க தொழில் முயற்சி நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக அவ்வவ் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கபடும் அமைச்சரவை பத்திரத்திற்காக சமர்ப்பிக்கபடும் நிதியமைச்சின் அவதானிப்புக்கள் மூலம் மற்றும் பகிரங்க தொழில் முயற்சி நிறுவனங்களை நேரடியாக வினவுவதன் மூலமும் தொடர்ந்தும் |

| | | | |
|---|---|---|---|
| | முறையே 77 சதவீதம், 74 சதவீதம் மற்றும் 65 சதவீதமாக காணப்பட்டது. | | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பாக மேற்பார்வை செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ii) | அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 06 வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் ஏதும் சமர்ப்பித்திருக்காததுடன், இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 05 வருடங்களாக வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | -மேற்படி- | இணங்குகின்றேன். அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கான வருடாந்த அறிக்கைகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் சமர்ப்பிக்கும் படி எழுத்து மூலமாக தொடர்ச்சியாக இந்த நிறுவனத்தினால் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பாக அந்த நிறுவனங்களினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | 2019 நிதி நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையின் படி 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகள் மீது கவனம் செலுத்தும் போது மேற் குறிப்பிட்ட 280 பகிரங்க தொழில் முயற்சிகளில் முறையே 09, 20 மற்றும் 37 நிறுவனங்கள் ஆக வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித் திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | இணங்குகின்றேன். வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல் தொடர்பாக மேற்பார்வை அலுவல்கள் விஸ்தரித்தல் தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டது. |
| (ஈ) | இலங்கையில் பகிரங்க தொழில் முயற்சிகளின் நல்லாட்சியை சான்றுபடுத்தும் முக்கிய நிறுவனமாக ஆகுவதற்குரிய தூர நோக்குடன் செயற்படும் பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் தனது மேற்பார்வையின் கீழ் காணப்படும் பகிரங்க தொழில் முயற்சிகளை நிருவகிக்கும் கம்பனிகளின் | திணைக்களத்தின் தூர நோக்கின் படி பகிரங்க தொழில் முயற்சிகளை நிருவகிக்கும் கம்பனிகளின் மேற்பார்வையை வெற்றிகரமாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க | இணங்குகின்றேன். நிருவகிக்கும் கம்பனி களின் மேற்பார்வை/ முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல் ஒன்று வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கொள்கைளை செயற்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பார்வை தொடர்பான திணைக்களத்தின் பொறுப்பு செய்பணி மற்றும் பங்களிப்பு மற்றும் நெறிமுறை தொடர்பாக 2019 ஆண்டு இறுதி வரை அறுதியாக இனங்கண்டிருக்கவில்லை. | வேண்டும். | அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதனை அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | நிருவகிக்கும் கம்பனிகளின் உயர் மட்ட முகாமைத்துவத்தை தொடர்பு கொண்டு நடாத்தப்பட்ட செயலமர்வின் தொடர் நடவடிக்கைக்காக இனங்கண்டிருந்தவாறு பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால், நிருவகிக்கும் கம்பனிகளின் நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக தெளிவான அறிவுறை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிருவகிக்கும் கம்பனிகளினால் பகிரங்க தொழில் முயற்சி சுற்றறிக்கைகள் எவ்வளவு தூரம் தொடர்புபடுத்த வேண்டும் என தெளிவாக வரையறுக்கப் பட்டிருத்தலும் 2019 திசெம்பர் 31 வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | நிருவகிக்கும் கம்பனிகளின் நிதி சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக திணைக்களத்தின் பொறுப்பு நிறைவேற்றப்பட வேண்டும். | -மேற்படி- |